REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 175

நம் நாடு

திராவிடத் தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: மார்கழி 20௳ திங்கள் 4-1-54 ★ ★ ★ வெளியூர்: மார்கழி 21௳ செவ்வாய் (5—1—54)

எல்லா வரலாறுகளிலும் அந்தக் கறை உண்டு!

—(:)—

பாண்டியன் படம் பாரதமாதா புதல்வரின் கோர விளையாட்டை நினைவுறுத்துகிறது!

—:X:—

லால்குடி நடராசன் படம் ஆளவந்தார்களின் அக்கிரமத்தைச் சுட்டிக்காட்டுகிறது

சென்னையில் கருணாநிதி

சென்னை, ஜன. 4—

"நாங்கள் உங்கள் முன்பாகப் பேசிக்கொண்டிருக்கிறோம்; பேசாத உருவமாக பாண்டியன் அவர்கள், நம் முடைய பக்கத்திலே, படமாக இருக்கிறார் தோழர் பாண்டியன் வடசென்னை தி. மு. கழகத் தூண்களில் ஒருவர்—செயல் மணி; அவர், இன்று, உங்கள் முன் படமாக வைக்கப்பட்டிருக்கிறார்; ஆனால், படம் கூறும் சோகக் கதை, வேதனை தரக்கூடியது.

"பாண்டியன் படத்தை நாம் பார்க்கும்போது, நீதி விளக்கேற்றிய பாண்டியன் நெடுஞ்செழியன் நினைவு வருகிறது. பாண்டியன் படத்தை நாம் பார்க்கும்போது, சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேரான பட்டிவீரன்பட்டி சவுந்திரபாண்டியன் நினைவு வருகிறது.

"அறம் தழைக்க, அன்பு செழிக்க, ஆவன செய்வோம் என்று கூறிய கருணையே உருவெடுத்தவர்கள்தான், இன்று, மிளகாய்ப் பொடியையும், குண்டாந் தடியையும் நம்பி வாழ்கிறார்கள்—அதைத்தான் பாண்டியன் படம் எடுத்துக் காட்டுகிறது.

"நேற்றையத் தினம், லால்குடி நடராசன் படத் திறப்பு விழா, லால்குடியிலே நடைபெற்றது; இன்றையத் தினம், பாண்டியன் படத் திறப்பு விழா இங்கு நடைபெறுகிறது. இந்தப் படம், 'பாரத மாதாவின் புதல்வர்கள் என்னைக் கொன்றுவிட்டார்கள்,' என்று கூறுகிறது. லால்குடி நடராசனின் படம், 'இந்த நாட்டை ஆளவந்தவர்களே, என்னைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்,' என்று கூறுகிறது."

—என்று, நேற்று, பாண்டியன் கல்லறையில் நடைபெற்ற, வட சென்னை, கே. என். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக முதலாண்டு விழாவில், தோழர் மு. கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"எந்த நாட்டு வரலாறும், இந்தக் கறை படியாமல் இருந்ததில்லை; இதை நாம் உணருவோம்—நாடும் நன்கு உணரும்—இதைத்தான் உலகச் சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. ஒரு சில நாடுகளின் கடந்த கால வரலாறு எழுத்தாணியால்கூட எழுதப்படவில்லை. எலும்புகளால், இரத்தத்திலே தோய்வைத்து எழுதப்பட்டிருக்கிறது. அவ்வாறு எழுதப்பட்ட ஏடுகளைத் தைக்க, தூக்கு மேடையேறிய தூய்மையுள்ளம் கொண்டோரின் நரம்புகளே நூலாகப் பயன்பட்டிருக்கின்றன."

"காங்கிரஸ் தியாகிகளை அறிமுகம் செய்து வைப்பதாக இருந்தால், 'இவர் உப்பு சத்தியாக்கிரகத்திலே சிறை சென்றவர்; இவர் தென்னாப்பிரிக்கா போராட்டத்திலே காந்தியாருக்கு உறுதுணையாக இருந்தவர்,' என்று கூறி அறிமுகப்படுத்தியது ஒரு காலமிருந்தது. இப்போது அப்படியல்ல—'இவர் சண்டியர்; இவர் பயில்வான்; இவர்தான் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்; இந்த வழக்கிற்கு உடந்தையாக இருந்தவர்' என்று சொல்லித்தான் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது.

"அவர்கள் கையிலிருந்த கொடியின் மூன்று வர்ணங்களில், பச்சை நிறத்தை பாகிஸ்தான் எடுத்துக் கொண்டது; சிவப்பை தி. மு. கழகம் எடுத்துக் கொண்டது; இன்னொரு நிறத்தை வேறொரு கட்சிக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள்; ஆகவேதான் அவர்கள் (தேசியத் தோழர்கள்) கொடியை இழந்துவிட்டு இப்போது வெறும் தடியை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்."

"நாம் பாண்டியனை இழந்தோம்; செல்லிக்குப்பம் பஜீத்தை இழந்தோம்; வேலாயுதத்தை இழந்தோம்; இன்னும் பலரை இழக்கத் தயாராக இருக்கிறோம்; —ஏன், அந்த நிலை ஏற்பட்டது?—அந்த, 'ஏன்' என்ற கேள்வியைத்தான் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்—'ஏன்' என்ற கேள்விதான் பலப் பல நாட்டு சிம்மாதனங்களை ஆட்டிப் படைத்திருக்கிறது—'ஏன்' என்ற கேள்வியால்தான் தி. மு. கழகம் நாள்தோறும் வளர்ந்து வருகிறது.

"பொதுவுடைமைத் தோழர்கள் நம்மைப் பற்றி மதிப்பிடுகையில், நமக்கெல்லாம் உலகம் தெரியாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் என்னென்ன நடக்கிறது என்பதை நாமறிவோம். தி. மு. கழகம் உலக வரலாற்றைப் பற்றிப் பேச ஆரம்பித்தால்—அதுவும் விளக்கமாகப் பேச முயன்றால், அதிலே நமக்குள்ள தெளிவையும், அவர்களுக்குள்ள தெளிவையும் மக்கள் மன்றம் அறியும்; ஆனால், தி. மு. கழகம், முதலில், 'சொந்த வீட்டைக் கவனி; நம் நாட்டைப் பார்' என்கிறது.

"'கல்லக்குடி போராட்டத்தினால் ஏழைகளின் துயர் போய்விடுமோ?' என்று

(4-ம் பக்கம் பார்க்க)

'என்னால் கொலையுண்டவர் சுற்றத்தார் என்னை மன்னித்து விட்டார்கள்;

எனவே, என்னைத் தூக்கிலிடுவது திருக்குரானுக்கு விரோதம்'

'ஆதலால், எனக்கு மன்னிப்புத் தாரும்' 'அதற்கு நடைமுறை சட்டத்தில் இடமில்லை பாரும்!'

கராச்சி, ஜன. 4—

பாகிஸ்தான், 'ஒரு இஸ்லாமிய அரசு,' என்று, அதன் அரசியல் சட்டம் அறிவிக்கிறது. நடைமுறையில் உள்ள சட்டம், உலகெங்கும் அமுலில் இருந்துவரும் கிரிமினல் சட்டத்தை ஒட்டியும்-வெட்டியும், பாகிஸ்தான், தனது கிரிமினல் சட்டத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது; ஆனால், இந்தச் சட்டம் குரான் ஷரியத்துக்கு முரணாக இருக்கிறது. இதைச் சுட்டிக் காட்டி, ஒரு கொலைக் குற்றத்தில் தூக்குத் தண்டனை பெற்றவர், பாகிஸ்தான் சர்க்காரை உயிர்ப்பிச்சை கேட்கிறார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு பெண்ணை ஒரு பாகிஸ்தானி கொலை செய்துவிட்டான். சிந்து உயர்நீதிமன்றம் அவனுக்குத் தூக்கு தண்டனை அளித்தது.

தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றத்திற்கு மனு கொடுக்க அனுமதி கேட்டான். அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

அவன் உடனே குரான் கட்டளைப்படி, கொலையுண்ட பெண்ணின் சுற்றத்தார் நால்வரிடம், 'கொலை செய்தவனை மன்னிக்க வேண்டும்,' என்ற மன்னிப்புக் கடிதம் பெற்றுக் கொண்டு, ஒரு மத குருவின் ஆமோதிப்புடனும், பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலிடம் தன்னை மன்னித்துவிடுமாறு கருணைமனு ஒன்று கொடுத்து இருக்கிறான்.

கொலையுண்டவரின் சுற்றத்தார்கள், கொலை செய்தவனுக்கு மன்னிப்பு கொடுத்துவிட்டால், அவனை விடுதலை செய்துவிட வேண்டுமென்று குரான் கட்டளை கூறுகிறதாம். எனவே, இந்தக் குரான் கோட்பாட்டிற்கு எதிராகத் தன்னைத் தூக்கிலிடக் கூடாது என்று அவன் கருணை மனுவில் குறிப்பிட்டிருக்கிறான்.

ஆனால், நடைமுறையில் உள்ள சட்டத்தில், இதற்கு ஒரு ஏற்பாடு கிடையாது என்று வழக்கறிஞர்கள் கருத்தறிவிக்கின்றனர்.

'காந்தியார் கல்லறைக்கு அன்னியர் மாலையிடும்போது நான் அவர் சிலையைத் திறப்பதில் என்ன குற்றம்?'

—(:)—

'குருடர்கள்தான் காந்தியார் சேவையை மதிக்க மறுப்பர்'

உத்தமர் காந்தியார் சிலை திறப்பில் அண்ணாதுரை

வேலூர், ஜன. 3

"மற்ற யாரையும் போலவே, உத்தமர் காந்தியார் உருவச் சிலையைத் திறந்து வைக்க எனக்கு உரிமை உண்டு. 'ராஜ கட்ட'த்தில், உத்தமர் காந்தியாரின் கல்லறையின்மீது அந்நியர் உட்பட யாவரும் பூமாலை போடும்போது, நான், அவருடைய உருவச் சிலையைத் திறந்து வைப்பதற்குச் சில காங்கிரஸ்காரர்கள் தடங்கல் கூறுவது ஏன் என எனக்கு விளங்கவில்லை."

(4-ம் பக்கம் பார்க்க)

புரட்சிக் கம்யூனிஸ்டு பிரமுகர் கைது

பம்பாய்—

1948-லிருந்து போலீசாரால் தேடப்பட்டுவந்த புரட்சிக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர் சோபன சத்தியேந்திரநாத் பால் இங்கு கைது செய்யப்பட்டார்.

கட்சித் தலைவர் பன்னாலால் தாஸ்குப்தாவின் வலது கரம் எனக் கூறப்படும் இவர், அந்த காலத்தில் பல அரசியல் கொலைகளிலும், கொள்ளை வைத்தல் சம்பவங்களிலும் ஈடுபட்டவராம்.

அலிப்பூர் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்து, அப்போது காவலில் சில ஐரோப்பியரைத் தாக்கிக் கொன்ற சதித்திட்டத்திலும் இவருக்குப் பங்கிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

நம் நாடு

சென்னை 4—1—54 திங்கள்

ஆதித்தன் கனவு!

இந்திய அரசியல் சட்டத்தில், சில மாநிலங்களுக்கு இரண்டு சட்ட சபை ஏற்பாடுகள் இருக்கின்றன. கீழ் சபைக்குத்தான் சகல அதிகாரங்களும் உண்டு. கீழ் சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்குத்தான் சட்டமாகும் தன்மை இருக்கிறது.

கீழ் சபையின் தீர்ப்புக்குத்தான் அமைச்சர் குழுவும் இணங்கக் கடமைப்பட்டிருக்கிறது.

இரண்டாவது சபையான மேல் சபை வெறும் ஆலோசனை சபைதான். அதன் முடிவை மாற்றிவிட, கீழ் சபைக்கு உரிமை இருக்கிறது. எனவே, அமைச்சர் குழுவை, கட்டுப்படுத்துவதற்கு மேல் சபையால் முடியவே முடியாது. இரு சபைக்கும் உள்ள அதிகார உரிமையும், தொடர்பும் இந்த லட்சணத்தில்தான் இந்திய அரசியல் சட்டத்தில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஒரு சர்க்காரின் போக்கை மாற்றவும், வேறு வழியில் செல்ல கட்டளையிடவும் ஒரு சபைக்கு உரிமை இல்லையானால், அத்தகைய உரிமை பெற்றிருக்காத சபை இருப்பதும் ஒன்றுதான், இல்லாமல் தொலைவதும் ஒன்றுதான். பார்வையும் பழுதுபட்டு, காதும் மந்தமாகி, மூச்சும் தடைபட்டு, காலும் கைவாய்ப் புகுந்து காடேகத் தயாராக இருக்கும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள முதியவருக்கும், அமைப்பில் இந்த சபைக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நம்மால் சொல்ல முடியவில்லை.

பொதுமக்கள் விருப்பு-வெறுப்புக்கு மதிப்பளித்து, சட்டம் ஒன்றை மட்டுமே பொருட்டாக மதிக்காது அறநெறிக்கும் கட்டுப்பட்டு ஆட்சி செய்ய வேண்டும் என்று பொறுப்புள்ள அமைச்சர் குழுவாக ஒரு அமைச்சர் குழுவிருக்குமானால், அதிகாரமில்லாத இந்த மேல் சபையையும், மக்கள் நலனுக்கு வழி காட்டும் சிறந்த அமைப்பாகக் கொள்ளலாம்.

அதாவது, மேல் சபை உறுப்பினர்கள் கூறும் சிறந்த அனுபவக் கருத்துரைகளுக்குச் செவிமடுத்து, மிகுதிக் கவனம் மேற்சென்று பிடித்துக் கூறும் அவர்கள் அறிவுரையை மேற்கொண்டு, தமது செயலை ஒழுங்குபடுத்திக்கொள்வதின் மூலம், மேல் சபை ஏற்பாட்டின் விழுமிய நோக்கத்தை ஒரு அமைச்சர் குழு சிறப்புறச் செய்யலாம். ஆனால், அறிவுரைக்கோ, இன்னோரன்ன பொது மக்கள் கருத்துக்கோ மதிப்பளித்து நடக்கும் பெருங் குணம்தான், பொதுவாகக் காங்கிரசாருக்கும் அதிலும் சிறப்பாகக் கனம் ஆச்சாரியார் அமைச்சர் குழுவுக்கும் அறவே கிடையாதே! ஆகவே, கனம் ஆச்சாரியார் போன்ற ஆணவக் குன்றேறியுள்ளோரைக் கொண்டுள்ள எந்த அமைச்சர் குழுவினாலும் அதிகாரம் பெற்றுள்ள சபையானாலும் சரி, அதிகாரம் பெறாத மேல் சபை போன்ற சபையானாலும் சரி, அவை தம் மதிப்பில் குன்றத்தான் செய்யும்; அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

அமைச்சர் குழுவை தமது தீர்ப்பால் கட்டுப்படுத்துகின்ற உரிமை பெற்றுள்ள கீழ் சபையின் கட்டளையையே அமைச்சர் குழுவைக் கட்டுப்படுத்தாத 'வெறும் சிபார்சு' என்று பொதுஜன வாக்கை அலட்சியப்படுத்தி நடக்கப் புகுந்துள்ள அமைச்சர் ஆச்சாரியார் ஆட்சியில், அதிகாரம் சிறிதுமற்ற வெறும் ஆலோசனை சபையாக அமைந்துள்ள சபைக்கு, அதற்குரித்தான மதிப்பு ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. அதிலுள்ள உறுப்பினர்கள் கூறும் அறிவுரைகளுக்கும் கனம் ஆச்சாரியார் அமைச்சர் குழு செவி சாய்க்கவும் சாய்க்காது.

மக்களின் வாழ்க்கைத் துறையில் சிறந்து விளங்கும் அறிஞர் பெருமக்கள் பலருடையவும், நற்கருத்துக்கள் பலவும் நாடாளும் நல்லவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, மேல் சபை அமைப்பு, மக்களாட்சி தத்துவத்தில் இடம் பெற்று இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு விஷயத்தின் நன்மை-தீமைகளை, கட்சிப் பற்றோ, பிற பற்றோ கொண்டு நோக்காமல், நடுநிலை நின்று ஆராய்ந்து, ஆட்சியாளர்கள் செய்யத்தக்கது இவை, தகாதது இவை என இடித்துக் கூறும் அறிஞர் பெருமக்கள் மேல் சபையில் இடம் பெறுவது என்பதுதான் மரபு. இத்தகையவர்கள். தேர்வில் கலந்துகொள்ளவும் இயலாதது இவர்களே தேர்வில் வெற்றி பெறுவர் என்று உறுதியாகக் கூறுவதற்குமில்லை.

இத்தகைய சிக்கலினால், நாட்டு மக்களில் சிறந்த அறிஞர்களின் அறிவுரையை ஒரு ஆட்சி இழந்துவிடக் கூடாது என்பதற்காகவே, மேல்சபை, பலதிறப்பட்ட கல்வி கேள்விகளில் சிறந்தவர்களுக்காகவே ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

அறிஞர் பெருமக்களை இருக்க வேண்டிய ஒரு சபையில், கனம் ஆச்சாரியாரும், எந்தவிதச் சிறந்த பண்பும் பெற்றில்லாத சர் முகமத் உஸ்மானும், செல்வசிகாமணி ஆசாரியும் நியமன உறுப்பினர்களாகவும், பண பலத்தைக் காட்டி, நகராட்சி மன்ற உறுப்பினர் வாக்குகளைப் பறித்து, உறுப்பினராகியுள்ள நாதமுனிகளும் இடம் பெற்று இருப்பது மேல் சபை அமைப்பின் அடிப்படைக்கே பெரும் இழுக்காகும். நிற்க,

மேல் சபைக்குள்ள அதிகாரம், அந்த அமைப்பின் நோக்கம், அதில் இப்பொழுது இடம் பிடித்துள்ளவர்களின் நிலை, ஆட்சியாளர்களின் போக்கு, ஆகியவற்றைப் பற்றி ஒருவாறு விளக்கியுள்ளோம்.

இவ்வளவையும் சிந்தித்துப் பார்த்துத்தான், ஒரு உறுப்பினர், தாம் எது பேசுவதாக இருந்தாலும் யோசனை செய்து முன்வர வேண்டும். நண்பர் ஆதித்தன் அவர்கள், திருநெல்வேலி மாவட்ட பனை மர வரியைப் பற்றி, இவ்வளவையும் கருதிப் பார்க்காமலேதான் சர்க்காரை மிரட்டிவிட்டார் என்றே நாம் கருதுகிறோம்.

மேல் சபைக்குள்ள அதிகாரத்தையும், ஆச்சாரியார் அமைச்சர் குழுவின் ஆணவப் பிடிவாதத்தையும், விளக்கமாகத் தெரிந்துகொண்டவராக அவர் இருந்திருப்பாரானால், பனை மர வரி நீக்கத்துக்குத் தனது உறுப்பினர் பதவி ராஜிநாமாவோடு முடி போட்டுப் பேசக் கிளம்பி இருக்கமாட்டார். நான், தனது மேல் சபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிடுகிறேன் என அச்சுறுத்துவதினாலேயே, பனை மர வரியை ஆச்சாரியார் சர்க்கார் நீக்கிவிட உடனடியாக முன்வரும் என்று தோழர் ஆதித்தன் அவர்கள் உண்மையிலேயே நம்பி, அவ்வாறு அச்சுறுத்தி இருந்தாரானால், அது வெறும் அரசியல் கனவேயாகும்.

ஆச்சாரியாரின் குரங்குப் பிடி போக்கை அவர் அறியாமல் இருக்க நியாயமில்லை. தனது மிரட்டலுக்காக ஆச்சாரியார் பணிந்துவிடமாட்டார் என்ற உண்மை அவருக்கு விளக்கமாகத் தெரியும். உண்மை தெரிந்த அவர் அவ்வாறு ஆச்சாரியாரை அச்சுறுத்தி இருக்கிறார் என்றால், அதற்கு விசேஷப் பொருள் ஏதாவது இருக்கத்தான் வேண்டும்!

'பனை மர வரியை நீக்காவிட்டால், நான் ராஜிநாமா செய்துவிடுவேன்,' என நண்பர் விளையாட்டாகவோ வினயமாகவோ கூறினதை, நிதி அமைச்சர் சுப்பிரமணியம், விபரீத நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். 'ஆதித்தன் கூறுவது வெறும் மிரட்டல் அல்ல—வாக்குறுதியாகும்.' என்று வம்பளந்து, மேல் சபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தாக வேண்டிய நெருக்கடியை தோழர் ஆதித்தன் அவர்களுக்கு உண்டாக்கிவிட்டார்.

தோழர் ஆதித்தன் அவர்கள் ராஜிநாமா செய்யத்தான் வேண்டும் என்று வற்புறுத்தியதோடு நிதி அமைச்சர் நின்று விடவில்லை. தோழர் ஆதித்தன் அச்சுறுத்தலுக்கு ஒரு ஆருடத்தையும் அந்த அமைச்சர் கூறி இருக்கிறார்.

"திருநெல்வேலியில் ஒரு சட்டசபை உறுப்பினர் இடம் காலியாகப் போகிறது. அதற்கு நடைபெறப்போகும் துணைத் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டுதான் ஆதித்தன் ராஜிநாமா செய்வதாக மிரட்டுகிறார்" என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு நிதி அமைச்சர் கூறியது கோர்ட்டை அவமதித்த குற்றமா, சபையை அவமதித்த குற்றமா, அல்லது இரண்டுமா என்பதைப் பற்றி எல்லாம் நமக்குக் கவலை இல்லை. ஆனால், 'நான் ராஜிநாமா செய்துவிடுவேன்' என்று நண்பர் ஆதித்தன் அச்சுறுத்தினதற்கு எது காரணமாக இருந்ததோ, அதன் கதி என்ன ஆயிற்று என்பதைக் குறித்துத்தான் நாம் கவலைப்படுகிறோம்.

அதாவது, திருநெல்வேலி மாவட்ட ஏழை மக்கள் மீது போடப்பட்டுள்ள பனை மர வரியை சர்க்கார் நீக்கினாரா, இல்லையா என்பது குறித்துதான் நமது கவலை. பனை மர வரி விவகாரம் அப்படியேதான் எப்பொழுதும்போல் இருக்கிறது. நண்பர் ஆதித்தன் அவர்களின் ராஜிநாமா மிரட்டல், பனை மர வரி கொடுக்கும் மாவட்ட மக்களின் வரிச் சுமையைக் குறைத்துவிடவில்லை. அந்தச் சுமை அவர்களுக்கு அப்படியேதான் இருக்கிறது. பனை மர வரியை சர்க்கார் குறைக்க வேண்டும் என்ற தோழர் ஆதித்தன் கனவு நிறைவேறவில்லை. கனவு கனவாகவே இருக்கிறது. அது நனவாகும் நாள் எந்த நாளோ?

திருநெல்வேலியில் ஒரு சட்ட சபை உறுப்பினர் இடம் காலியாகப்போகிறது என்றும், அதற்கு நடைபெறும் இடைத் தேர்தலில் ஆதித்தன் போட்டியிடும் நோக்கத்தோடுதான் அவர் ராஜிநாமா செய்வதாகக் கூறுகிறார் என்றும் நிதி அமைச்சர் கூறியது, செயலுக்கு வருமோ, வராதோ நமக்குத் தெரியாது. அப்படி ஒருவேளை அமைச்சரின் ஆருடம் நிறைவேறுமானால், நடைபெறும் இடைத் தேர்தலில் நண்பர் ஆதித்தன் கலந்துகொண்டால் அந்தத் தொகுதி மக்களின் வாக்குகள் நண்பருக்குக் கணிசமாகக் கிடைக்குமென்பதில் ஆட்சேபனை இல்லை. அதற்காகத்தான் இப்பொழுதே பனை மர வரி நீக்கத்தைக் குறித்தும் பேசி, அந்த வாக்காளர் ஆதரவு தேடுகிறார் என்று பொருள்படும்படியாக நிதி அமைச்சர் கூறுவது வெறும் விஷமத்தனமாகும். ஒரு அபேட்சகர், வாக்காளர் ஆதரவைப் பெற நண்பர் ஆதித்தனைப் போல் நடந்துகொள்வது எல்லா வகையிலும் நியாயமானதேயாகும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டு, தோழர் ஆதித்தன் அவர்கள் சட்டசபை உறுப்பினர் ஆவதை நாம் மனமார வரவேற்கிறோம். அதுவரை, இத்துறையிலும் அவருடைய எண்ணம் வெறும் கனவாகத்தான் இருக்கிறது என்பதில் ஐயமில்லை!

கே. வி. கே. சாமி 'பரோலி'ல் விடுதலை

☆

திருநெல்வேலி, ஜன 2—

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்டுள்ள தோழர் கே. வி. கே. சாமியை இன்று நெல்லை செஷன்ஸ் நீதிபதி ஜன. 7-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை, 'பரோலி'ல், ரூ 5000 ஜாமீனில், தோழர் கே. வி. கே. சாமியின் தாயார் 26-ந் தேதி இறந்தது சம்பந்தமான இறுதிக் கடன்களில் கலந்துகொள்வதற்காக விடுதலை செய்தார்.

ஆதித்தன் ராஜிநாமா

சென்னை, ஜன. 2 —

சென்னை மேல் சபையிலிருந்து எஸ். பி. ஆதித்தன் இன்று ராஜிநாமா செய்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பனைமர வரியை தமது கோரிக்கைக்கிணங்க சர்க்கார் ரத்து செய்யாததாலும், நிலம் மீது வரி விதித்திருப்பதாகவும்; சர்க்காரின் இத்தகைய போக்கை ஆட்சேபிக்கும் முறையில் ராஜிநாமா செய்வதாகவும் கூறி, தோழர் எஸ். பி. ஆதித்தன் தமது ராஜிநாமா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மேற்கு வங்கம், பீஹாரில் ரயில் விபத்துக்கள்

கல்கத்தா, ஜன. 3—

மேற்கு வங்கத்தில் கல்கத்தாவுக்கு அருகிலுள்ள ஹௌரா ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்தில் நேற்றிரவு இரு ரயில்கள் மோதிக்கொண்டன. நிலையத்தில் நின்றுகொண்டிருந்த பிரயாணி ரயில் மீது நிலக்கரி ஏற்றி வந்த கூட்ஸ் வண்டி மோதியது; இதனால், 6 ரயில்வே சிப்பந்திகள் காயமடைந்தனர். இரண்டு எஞ்சின்களும் பழுதடைந்தன.

* * *

பாட்னா, ஜன. 2—

பீகார் மாநிலத்தில், 'ரக்சால்' என்ற இடத்துக்கருகில் இரண்டு ரயில்கள் மோதினதில் 8 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். மாண்டவர்களில் அறுவர் எஞ்சின் சிப்பந்திகள் என்றும், இருவர் பிரயாணிகள் என்றும் சொல்லப்படுகிறது.

பனிப்புயலில் சிக்கிய விமானம்

மலையில் மோதுண்டு கவிழ்ந்தது

பெஷாவர்—

ஆப்கன் விமான சர்வீசைச் சேர்ந்த ஒரு விமானம் காந்தார் செல்லும் வழியில் ஹிராத்துக்கு 30 மைல் தூரத்தில் விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த பிரயாணிகள் அனைவரும் உயிரிழந்தனர்.

பனிப்புயல் காரணமாக விமானம் வழி தவறி ஒரு மலையில் மோதுண்டு கவிழ்ந்தது எனச் சொல்லப்படுகிறது.

அரிசிக் களஞ்சியத்திற்கு ஆபத்து!

பாரிஸ், ஜன 2—

இந்தோ—சீனாவின் அரிசிக் களஞ்சியப் பிரதேசத்திற்கு, வியட்மின் தாக்குதல் காரணமாக ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வியட்மின்னின் அடுத்த 'அடி' எங்கே விழும் என்று பிரெஞ்சு இராணுவத்தால் எதிர்பார்க்க முடியவில்லை.

பிரெஞ்சு சேனாதிபதி, பாதுகாப்புக்கான சகல ஆயத்தங்களையும் செய்து வருகிறார்.

நசவாளர் குடும்பம் நல்வாழ்வு பெற

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

தஞ்சாவூர்

தஞ்சாவூர் தி. மு. கழகத் தோழர்களால் வசூலிக்கப்பட்ட தூத்துக்குடி வழக்கு நிதிக்காகப் பொருளுதவி தந்து சிறப்பித்த கீழ்க்கண்ட அன்பர்களுக்கு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதாக, தஞ்சை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் ஏ. வி. பதி அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

	ரூபாய்
ஓய் ஆரோக்கியசாமி (பூக்காரத் தெரு) வகையில்	60
எஸ். பெத்தண்ணன்	25
ஏ.ஓய்.எஸ். பரிசுத்த நாடார்	25
கே. காமாட்சி	25
பி. கிருஷ்ணன்	15
வி. மயூரநாதன்	10
கே. எம். மணியக்காரர்	10
எஸ். சீனிவாசன்	10
சி. சுப்ரமணியம்	10
கே. சுல்தான்	10
மகாலிங்கம் பவர் பிரஸ்	10
கே. ராதாகிருஷ்ண நாயுடு	10
ஆர். ஜி. சீத்தாராமன்	10
என். ஆர். சாமியப்ப முதலியார்	5
தங்கமுத்து	5
ஏ. எஸ். எம். கல் ரொண்டல்	5
எம். திருவண்ணாமலை	5
எம். சுந்தரராஜ் பிள்ளை	5
ஏ. எஸ். எம். சீனியப்ப நாடார்	5
பக்கிரிசாமி வாண்டையார்	5
நல்லகருப்ப நாடார்	5
எம். சங்கிலி நாடார்	5
ஜி. ரெத்தினம்	5
குருவைய பிள்ளை	5
திருநாவுக்கரசு	5
டி. எஸ். அந்தோனிசாமி	5
ஓய். சேவியூர்	5
ஜேம்ஸ்	5
சின்னையா பிள்ளை	5
பி. பரமசிவம்	5
கே. பாலசுப்ரமணியம்	5
பி. கோவிந்தராஜ் மூலம் வசூல்	12
கணபதி	3
ரெங்கநாதன்	3
சந்திரிப்பூ	2
எம். ஈ. மகமது யூசுப்	3
வி. கோவிந்தராசன்	3
ஏ. பூர்வனி அம்மாள்	3
எம். ராஜன்	3
கே. சின்னபிள்ளை	3
எழில் அரசன்	3
முருகானந்தம்	3
டி. ஆர். கே. மணி பீடி பாக்டரி	3
மாரியப்பன் மூலம் வசூல்	3
ஓர் அனுதாபி	2
வி. கணபதி	2
கே. எஸ். கருப்பையா பிள்ளை	2
ஏ. என். கோபாலன்	2
பக்தசாமி நாடார்	2
எஸ். எம். பெரியகுழந்தை பிள்ளை	2
செல்லையா [illegible]ர்	2
அ. திருஞானம்	2
அண்ணுசாமி	2
அ. சிங்காரவேல் முதலியார்	2
வி. நடராசன்	2
என். நாக[illegible]ணி அம்மாள்	2
ஏ. பொன்னுசாமி	2
ஜி. ஈ. [illegible]	2
வி. தாமரை	2
ஏ.டி. சண்முகவேல் நாடார்	2
வி. ஆறுமுகம்	2
எம். தில்லையப்பன்	2
எம். முருகேசன்	2
[illegible] நடராசன்	2
சண்முக சுண்டியர்	2
சி. பெரியசாமி	2
ரெங்கசாமி	2
என். கணபதி	2
ஜெகநாதன்	2
குழந்தைவேல் நாடார்	2
க. அப்துல் சத்தார்	2
கோவிந்தராஜ்	2
[illegible]த்தராஜலு	2

	ரூபாய்
என். ரெத்தினம்	2
பக்தவச்சலம்	2
என். வி. [illegible]	2
டி. நடராச [illegible]டார்	2
சந்தானம்	2
வி. கோவிந்தசாமி	2
கே. எஸ். சண்முகம்	2
வஹாப்	2
துரைசாமி நாடார்	2
என். வரதராஜன்	2
ஏ. வி. பி. சிவபாக்கியம்	1
ஏ. வி. பி. துரைராசன்	1
ஏ. வி. பி. வீரமணி	1
ஏ. வி. பி. ராணி	1
ஏ. வி. பி. ஜெயா	1
எம். எம். நடராசன்	1
கே. பட்டு	1
பி. சிவஞானம்	1
தங்கவேல்	1
எம். ரெத்தினம்	1
ஆர். சிவசங்கரன்	1
வி. எஸ். தமயந்தி அம்மாள்	1
நரசிம்மலு	1
அமீரான் ராவுத்தர்	1
கே. ஜி. ராசன்	1
எஸ். எஸ். கந்தசாமி	1
ஓர் அனுதாபி	1
காயாரோகணம்	1
அந்தோனிசாமி	1
எஸ். பி. ஆர். [illegible]கரசன்	1
ஜப்பான் பொன்னுசாமி செட்டியார்	1
சதாசிவம்	1
வி. கே. நடராசன்	1
எஸ். சாமிநாதன்	1
என். ரெத்தினம்	1
கே. வி. காவேரி செட்டியார்	1
வி. ஏ. எஸ். முனியாண்டி	1
காளிமுத்து நாயக்கர்	1
என். முத்துகிருஷ்ணன்	1
பி. என். மணி ஐயர்	1
ஜே. கே. துரை	1
ராமகிருஷ்ணன்	1
ஏ. ராஜம்	1
டி. ஆர். என். [illegible]	1
பார்த்தசாரதி	1
பீட்டர்	1
டி. எஸ். சுப்ரமணியம்	1
முத்து, பாலகிருஷ்ணன்	1
ஆரோக்கியசாமி	1
எஸ். மணி	1
தவமணிராசன்	1
தங்கவேல்	1
கிருஷ்ணன்	1
ராமன் காப்பித்துள் கம்பெனி	1
குப்புசாமி	1
கணேசன்	1
சோமு	1
டி. நடராசன்	1
மணிமேகலை	1
மோகனதாஸ்	1
எஸ். [illegible]சாமி	1
ஏ. செள முத்து	1
டி. பி. எம். ரெங்கசாமி பிள்ளை	1
டி. சம்மந்தம்	1
ஏ. வடிவேலு	1
சிதம்பரம்	1
டி. பன்னீர்செல்வம்	1
முத்தண்ண நாடார்	1
எம். கிருஷ்ணமூர்த்தி	1
வி. திருமலைசாமி	1
ஜி. நாகப் பிள்ளை	1
குஞ்சு	1
[illegible]டு	1
பண்ணர்	1
[illegible]சன்	1
கே. சதாசிவம்	1
எ. சுந்தர்ராஜ்	1
எஸ். எஸ். கோதண்டராமன்	1

	ரூபாய்
கே. ராமு	1
காவல்காரன்	1
ஏ. பானு	1
டி. ஜி. லோகநாதன்	1
எஸ். பூபதி	1
டி. தணிகாசலம்	1
எஸ். ராமராஜ்	1
கே. ஜி. ராசன்	1
டி. ஆர். சம்பத்குமார்	1
டி. ஆர். நவநீதம்	1
வி. நளங்கிள்ளி	1
கரந்தை அன்பர்	1
பிச்சைப் பிள்ளை	1
டி. பி. கண்ணன்	1
ராகவ சாயபு	1
கரந்தை அன்பர்	1
கோயா	1
ஆர். டி. எச்.	1
டி. துரையப்பா	1
ஆர். மோகன்லால்	1
சந்திரசேகரன்	1
வி. ஆர். சுப்ரமணியம்	1
திருமேனி	1
கனகசுந்தரம்	1
ராஜாங்கம்	1
பட்டுசாமி	1
எம். சிவகொழுந்து	1
வி. ஏ. விஜயராகவன்	1
கே. சபாபதி	1
தென்றல்	1
டி. சோமசுந்தரம்	1
கண்ணன்	1
கே. ராமசாமி, கே. ராமையன்	1
பி. கோவிந்தராஜ்	1
வில்லவன் கோதை	1
பழனிநாதன், விவேகநாதன்	1
கோவிந்தசாமி	1
நாகராஜன்	1
ராஜமாணிக்கம்	1
ஆர். ரெத்தினசபாபதி	1
வீணு	1
வெள்ளைச்சாமி	1
கே. ஜி. முத்துசாமி	1
எஸ். நடராசன்	1
அய்யனூர்தேவர்	1
எஸ். சக்கரை	1
சீனிவாசன்	1
ஆறுமுகம்	1
தியாகராஜன்	1
	அணா
எஸ். ஆர். சீத்தாராமன்	8
சற்குணம்	8
கே. முருகையன்	8
ஜி. தனராஜ்	8
தேவகி	8
டி. ஜி. தண்டாயுதம்	8
ஜெம்புலிங்கம் பிள்ளை	8
சி. அருணாசலம்	8
மருதப்ப செட்டியார்	8
எஸ். ரெங்கநாதன்	8
ஆர். சுபம்புலிங்கம்	8
கிருஷ்ணானந்தம்	8
எஸ். ராமு	8
எம். ராஜலிங்கம்	8
மாணிக்கம்	8
கிருஷ்ணாஜி	8
பி. பாலசுப்ரமணியம்	8
ராமச்சந்திரன்	8
ஜி. கிருஷ்ணன்	8
டி. எஸ். சொக்கலிங்கம்	8
ஜெகநாதன்	8
நடராசன்	8
டி. எம். பானு	8
டி. எஸ். சீதாராமன்	8
டி. கிருஷ்ணன்	8
கே. ஜி. ஆர். கோபால்	8
எஸ். எம். ராவ்	8
வையாபுரி நாட்டார்	8
பார்த்தசாரதி	8
ராஜாராம்	8
பி. சின்னப்பன்	8
எஸ். ராமலிங்கம்	8
பி. குருசாமி	8
வி. அருணாசலம்	8
ஏ. கிருஷ்ணன்	8
வி. முருகேசன்	8
பி. பஞ்சவர்ணம்	8
கிருஷ்ணன்	8
லெக்ஷ்மணன்	8
தங்கவேல் செட்டியார்	8
தேவி	4

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 10,228-9-7

	அணா
எஸ். ராஜா	4
ஆறுமுக ஆச்சாரி	4
எஸ். சிவன்	4
கே. என். அம்பி	4
சாமிநாதன்	4
திருமலை	4
ஜெயராமன்	4
வெங்கடாசலம்	4
ராஜமாணிக்கம்	4
கோவிந்தசாமி	4
ரஹிமதுல்லா	4
திருவேங்கடம்	4
ஜி. கல்லியாண யுபி	4
எஸ். கோவிந்தன்	4
பழனிநாதன்	4
கே. சோமசுந்தரம்	4
மர்து உசேன்	4
ரமணி அய்யர்	4
மணி	4
ரகுநாதன்	4
ராமசாமி	4
ஓர் அனுதாபி	4
ராசு	4
கோவிந்தராஜ்	4
பாலசுப்ரமணியம்	4
முனிசாமி	4
தியாகராசன்	4
டி. பக்தன்	4
செகப்பா	4
சனார்த்தனம்	4
கே. வைத்தீஸ்வரன்	4
ஜாவி	4
மாரிமுத்து	4
ஆரோக்கியசாமி	4
ஓர் அனுதாபி	4
மயிலடி ராமகிருஷ்ணன் மூலம் வசூல்	5—10—0
கரந்தை கணேசன் மூலம் வசூல்	6—8—0
ஓர் தோழர் மேடையில் மு. கருணாநிதி கசம் 100 காலணா கொடுத்தது	1—9—0
ஏ. வி. பதி	1—9—3
பி. சிங்காரம் உண்டியல் மூலம்	1—1—3
லெக்ஷ்மணன்	0—10—6
6—12—53-ல் நடந்த தோழர் மு. கருணாநிதி பொதுக்கூட்டத்தில், எஸ். பெத்தண்ணன், பி. சிவஞானம், கே. பட்டு, ஓய் சேவியர் இவர்கள் மூலம் உண்டியல் வசூல்	68—0—0
ஆக வசூல்	677—0—0
மேற்கண்ட விவரப்படி தோழர்கள் அளித்த அன்பளிப்பான மொத்த வசூல் ரூ. 677-0-0ல் தோழர் மு. கருணாநிதி தஞ்சைக்கு வந்தபோது வரவேற்பு நிகழ்ச்சிக்கான செலவுகள், மஜூர் வகை, நிதியளிப்புக் கூட்டத்திற்கான செலவு ஆக 8 வகைச் செலவுகளுக்கும் ஆன மொத்த செலவு	139—0—0
மீதி தொகை ரூ.	538—0—0

குறிப்பு: மேற்குறித்த மீதி தொகை ரூ 538—0—0-ம் தூத்துக்குடி நிதி பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

—தி. மு. கழகம், தஞ்சாவூர்

மதுவிலக்கு: ஆந்திர கா. க. தலைவர் கருத்து

சர்நூல், ஜன. 3—

மதுவிலக்கு அமுலுக்கு வந்த பின், குடிகாரப் பெண்கள் அதிகரித்து விட்டதாக ஆந்திர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டி. கோபால்ரெட்டி கூறினார்.

"அதற்கு முன்பு ஆண்கள் தான் குடித்தார்கள்; இப்போது பெண்களும் குடிக்கிறார்கள். ஏழைகளின் நன்மைக்காகத்தான் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது.

"மக்கள்தான் குடியை நிறுத்தவில்லையே; சர்க்கார் ஏன் வருவாயை இழக்க வேண்டும்," என்று அவர் மேலும் சொன்னார்.

புதிய அரசியல் கட்சி உதயம்

சிட்டகாங், ஜன. 2—

'பாகிஸ்தான் மைனாரிட்டி லீக்' என்ற பெயரில், புது அரசியல் கட்சி யொன்று பாகிஸ்தானில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் இந்துக்கள், புத்த மதத்தினர், பின்தங்கிய வகுப்பினர்கள் மெம்பர்களாக இருப்பர். ஹரீஷ் சந்திர சென் என்பவர், இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

உப்பு விலை உயர்வு

புதுடில்லி, ஜன 3—

உப்பு விலை மீது, வரியை அதிகரித்து மத்திய சட்ட சபையின் சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அமுலுக்கு வந்து விட்டது.

தனிப்பட்டோர் உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்புக்கு மணங்குக்கு 2 அணாவும், சர்க்கார உற்பத்தி செய்யும் உப்புக்கு மணங்குக்கு 8½ அணாவும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் உப்பு விலை அதிகரிக்கப்படும்.

பிரபல சித்தவைத்தியர் மறைவு

பழனி வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி 72-வது வயதில் இயற்கையெய்தினார். வேலுசாமி சித்த வைத்தியத்தில் புகழ்பெற்றவர். 1947-ம் ஆண்டில் சென்னை மாநில சித்த வைத்திய சங்கத் தலைவராக 1937-ம் ஆண்டு முதல் மதுரை சித்த வைத்தியத் தலைவராக இருந்து வந்துள்ளார்.

அனுதாபம்

"மேப்பலூர் தோழர் ஏ. ராசகோபால் 26—12—53ல், உயிர் நீத்தமை குறித்து வருந்தி தி. மு. கழகச் சார்பிலும் மாணவர்கள் பாராட்டு கழக சார்பிலும் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தோழர் சா. சுப்ரமணியன் அறிவிக்கிறார்.

• • •

19—12—53ல், தோழர் மைனுதீன் தலைமையில் நடந்த டால்மியா சிமெண்ட் தொழிலாளர் நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில், இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி தோழர் ஹரிஹரநாத் சாஸ்திரி, விமான விபத்தில் உயிர் நீத்தமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

• • •

கீடாமங்கலம் தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் வே. விஸ்வநாதன் 27—12—53 அன்று இயற்கை யெய்தியமைக்கு கீடாமங்கலம் தி. மு. கழகச் செயற்குழு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறதென தோழர் இப்ராஹிம் அறிவிக்கிறார்.

நாம் அணிவோம் கைத்தறி துணியே!

"திராவிட நாடு திராவிடருக்கே' என்ற அடிப்படை உரமடைகிறது!"

—(:)—

'அங்கு உற்பத்தியானதை இங்கு இறக்குமதி செய்யாதீர்கள்'

—[o]—

'எங்களைத் தனியாக விட்டுவிடுங்கள்'

'நாங்கள் சமாளித்துக்கொள்ள முயற்சி செய்வோம்'

சென்னை, ஜன. 4

"பிற மாநிலங்களுக்காக என்ன செய்தபோதிலும், சென்னை சம்பந்தப்பட்ட வரையில், இந்த மாநிலத்துக்குள், பிற மாநிலங்களிலிருந்து மில் புடவைகள், துணிகள் இறக்குமதி தடை செய்யப்பட வேண்டுமென்று இப்போது நாங்கள் முடிவு செய்துள்ளோம். இம்முடிவை, இந்திய சர்க்காரிடம் வற்புறுத்தவும் விரும்புகிறோம்,"

—என்று, 2-1-54ல், சென்னை மேல் சபையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறினார். தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுவனவற்றை அந்த மாநிலங்களே உபயோகப்படுத்திக் கொள்ளட்டும்."

"எங்களைத் தனியாக விட்டுவிடுங்கள்."

"நாட்டின் பிற பகுதிகளில் உற்பத்தி செய்த மில் துணிகளையும், புடவைகளையும் இங்கு இறக்குமதி செய்யாதீர்கள்."

"எங்களாலானவரை சமாளித்துக் கொள்ள நாங்கள் முயற்சி செய்வோம்."

"துணிகள், புடவைகள் விஷயத்தில், நம் மாநிலத்தைத் தனியாக விட்டுவிட்டால், பெருமளவுக்கு இந்த கைத்தறித் தொழில் நிலைநிறுத்த முடியுமென்று நான் திடமாக நம்புகிறேன். இந்திய சர்க்காரிடம் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தும் விஷயத்தில், சபையினர், சர்க்காருக்குப் பூரண ஒத்துழைப்பும், ஆதரவும் அளிப்பர் என்று நம்புகிறேன்."

எம். பி. கோவிந்த மேனன், மந்திரி பதிலளித்துக்கொண்டிருக்கையில் குறுக்கிட்டுக் கேட்டதாவது:—

"சென்னை மாநிலத்திலுள்ள மில்களில் உற்பத்தியாகும் புடவைகள், துணிகள் என்னாவது?"

மந்திரி:—"நம் மாநிலத்தில் சில நெசவு மில்களே உள்ளன. நல்லவேளையாக இங்குள்ள மில்கள் நூல் நூற்பதிலேயே பிரதானமாக ஈடுபட்டுள்ளன. நெசவு மில்கள் சிலவேயாதலால் பெரும் பிரச்னை எதுவும் ஏற்பட்டுவிடவில்லை."

கோவிந்த மேனன்:—"மில் துணி, புடவைகள் இறக்குமதியை அறவே தடை செய்யும் விஷயத்தில் மாநிலம் பூராவும், கட்சி வேறுபாடின்றி சர்க்காரை ஏகமனதாக ஆதரிக்கின்றனர் என்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவிக்குமா?"

மந்திரி:—"சர்க்கார் ஏற்கனவே அவ்வாறு தெரிவித்திருக்கிட்டால்தானே இக்கேள்வி எழும்?"

★

சென்னை மேல் சபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தகவல்

சென்னை, ஜன. 3—

"பம்பாயில் ஒரு நபர் வருஷத்துக்கு ரூ 13-12-0-க்கு மேல் வரி செலுத்துகிறார். மேற்கு வங்கத்தில் ரூ 12க்கு மேலும், சென்னையில் பிரிவினைக்கு முன் ரூ. 8—8—0-க்கு மேலும், உத்திரப் பிரதேசத்தில் சுமார் ரூ. 8 வீதமும் ஒருவர் வரி செலுத்துவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. குறைந்த பட்ச வரி வரம்புக்கு மேல், இங்கு அதிக வரி விதிக்கப்படவில்லை," என்று, மேல் சபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் சொன்னார்.

* * *

அவர் கைத்தறித் தொழிலைப் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:

"செஸ்வரி மூலம் கிடைக்கும் பணத்தின் அனுகூலங்கள், கூட்டுறவுத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கு மட்டுமே கிடைப்பதாயிருப்பதால், பயனில்லை யென்றும், 80 சதவிகித நெசவாளர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேராதவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமே பிரதான நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்றும், இல்லாவிடில், அது சரியான முறையில் பயன்படாமல் போய்விடக்கூடுமென்றும் இந்திய சர்க்கார் வற்புறுத்தித் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கட்டளைப்படிதான் சென்னை சர்க்கார் நடக்கவேண்டியிருக்கிறது. எனவே, இந்தப் பணத்திலிருந்து சாத்தியமான வரை அதிகப் பேர் நன்மையடைய ஏற்பாடு செய்ய பொருட்டு, 'செஸ்' நிதியிலிருந்து நெசவாளர்களுக்குக் கடனாக ரூ 6,62,000 வழங்க சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

கூட்டுறவு சங்கங்களில் நெசவாளர்கள் அங்கத்தினர்களாவதற்காகவே இக்கடன். இதன் மூலம் சுமார் 33,100 நெசவாளர் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வருவார்களென நம்புகிறோம்.

மாநிலங்கள் வழங்க பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இது கூட்டுறவு இயக்கங்களுக்கு கூட்டுறவு அங்கீகாரம் பெற்ற சங்கங்களுக்குமுண்டு," என்றார்.

* * *

வாக்குறுதி தருகிறாராம்!

தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்ற கோரிக்கை பற்றி நிதி அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மலையாளிகளும், கன்னடர்களும் நம்முடன் இருப்பதால் நாம் இவ்விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே என் கருத்து. சாத்தியமான வரை தமிழை அதிகம் பயன்படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென உறுதி கூறுகிறேன். அதை ஆட்சி மொழியாக்க நாம் கொஞ்சகாலம் பொறுத்திருக்க வேண்டும்" என்றார்.

எல்லா வரலாறு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவுடமைத் தோழர்கள் கேட்கிறார்கள். அமெரிக்க நாட்டு டல்லஸுக்குக் கருப்புக் கொடி காட்டினால் எப்படிப் பஞ்சம்-பட்டினி மறையுமோ? தோ, காஷ்மீர் தினம் கொண்டாடினால் எப்படிப் பஞ்சம்—பட்டினி மறையுமோ, அதுபோலத்தான், கல்லக்குடி போராட்டமும் என்பதை அவர்கள் அறியத் தவறிவிட்டார்கள். பொதுவுடமைத் தோழர்கள் 'பசி' ஒழிந்தால் போதுமென்கிறார்கள்—மானமும் வேண்டுமென்கிறது தி. மு. கழகம்.

"நேரு நம்மையெல்லாம் 'நான்சென்ஸ்' என்றார்—மன்னித்தோம்; மறந்தோம்; பலமுறையும் அதே வார்த்தையைச் சொன்னார்—வருத்தம் தெரிவிக்க ரயிலை நிறுத்தினோம்; ஆனால், அவர் 'காட்டுமிராண்டிகள்' என்று சொல்லிப் போயிருக்கிறார்; அவருடைய நாக்கு தடித்த நாக்கு—மன்னிக்க வேண்டும்—அவருடைய பேச்சு தடித்தனமான பேச்சு; நமது நாக்கு அப்படியல்ல-செந்நாப் போதாரின் திருக்குறளைக் குடித்த நாக்கு; கலிங்கத்துப் பரணியைப் படித்த நாக்கு; சிலப்பதிகாரத்தை சுவைத்த நாக்கு—அப்படிப் பேச நம்முடைய நாக்கு எழாது.

"கருப்புக்கொடி காட்டியதற்குக் 'காட்டுமிராண்டிகள்' என்று சொன்னவர், பஞ்சாபில் பேசவிடாமல் தடுத்தபோது, ஊமையாக இருந்ததற்குக் காரணம் என்ன? நாட்டுப் பற்றும், சொந்தக்காரர்கள் என்ற பாசமும் தானே!

"வடநாடு—தென்னாடு பிரிவினை பற்றி நேரு அறியாமலில்லை. அவர் அதை நன்குணர்வார்; 'எல்லோரும் இந்திய மக்கள்,' என்ற எண்ணம் அவருக்கு இருந்தால் கோளக் கரைக்கு வந்தவர், புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சைத் தரணியைப் பார்க்காது போவாரா? அங்கே புயல், வெள்ளமென்றால், தென்னாடு செல்வத்தைக் குவித்துக் குவித்து அனுப்புகிறதே என்றுகூட பண்டிதர் உணரவில்லை."

யுத்த காலத்தில், ரஷ்யாவுக்கு அளித்த கப்பல்களைத் திருப்பிக் கொடுக்கும்படியும், வாங்கிக் கொண்ட யுத்த சப்ளைகளுக்காக ஈடு பணத்தைத் தரும்படியும் அமெரிக்கா கேட்டு வருகிறது.

விற்பனையாகி வருகிறது!

திராவிடர் டயரி—1954

தி. மு. கழக முழு விவரங்களும், 800 கிளைகளின் செயலாளர்கள், பொருளாளர் பேர்ப் பட்டியலும், வருமான வரி, விற்பனை வரி, ஆவணப் பதிவு, தபால், தந்தி விவரங்களும் அடங்கியது.

சொற்ப காப்பிகளே கைவசம் உள்ளன.
தேவைக்கு முன் பணத்துடன் எழுதவும்.

டயரி 1-க்கு ரூ. 1—0—0. விற்பனைக் கழிவு 20%.
தனிப்படி வேண்டுவோர் ரூ. 1-2-0 அனுப்பவும்.

'போர் வாள்' அலுவலகம்,
பவழக்காரத் தெரு, சென்னை—1.

காந்தியார் சிலைக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"காந்தியாருடைய சேவையைப் பாராட்டாதவர்கள், குருடர்களுக்குச் சமானமானவர்கள். காந்தியார் போதித்தபடியே ஜாதி வேறுபாடு ஒழிய வேண்டும்; வறுமை நீங்க வேண்டும், அதையே தான் தி. மு. கழகமும் கூறுகிறது."

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், வேலூரில், காந்தியார் உருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார். (முழு விவரம் பின்னர்)

வேலூர் நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள உத்தமர் காந்தியாரின் உருவச் சிலையை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை இன்று ராஜாஜி பூங்காவில் திறந்து வைத்தார். இவ் விழாவிற்கு ஆயிரக்கணக்கானோர் வந்திருந்தனர்.

நகரசபைத் தலைவர் சிதம்பரநாதன் காந்தியார் உருவச் சிலையைத் திறக்கும்படி தோழர் அண்ணாதுரையைக் கேட்டுக் கொண்டு காந்தியாரின் சாதனைகள் பற்றிப் பேசினார்.

நகரசபை கமிஷனர் தோழர் முத்துராமலிங்கம், அறிக்கை படிக்கையில் இது வரை பட்டருந்தோம். சிலையின் செலவுக்கு ரூ. 34013 செலவாகியிருக்கிறதென்றும், சென்னை சிற்பி நாகப்பாவின் மகன் எஸ். எம். மணி இதைச் செய்தாரென்றும், மூன்று ஆண்டுகளுக்கு முன் தலைவராக (சேர்மன்) இருந்த ஏ. கே. மாசிலாமணி அவர்கள் இதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார் என்றும் கூறினார்.

★

நகரசபை வரவேற்பு

வேலூர், ஜன. 3—

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை காஞ்சிபுரத்திலிருந்து காரில் இங்கு வந்து சேர்ந்தார். அவரை நகரசபை அலுவலகத்தின் வாயிலில் நகரசபைத் தலைவர் தோழர் சிதம்பரநாதனும், முனிசிபல் கமிஷனர் எஸ். முத்துராமலிங்கமும், கவுன்சிலர் எம். பி. சாரதியும் வரவேற்றனர்.

வரவேற்புக்குப் போடப்பட்ட பிரத்தியேகப் பந்தலில் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். உபதலைவர் ராமுலு அவர்கள் தோழர் அண்ணாதுரையை கூட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார். வரவேற்பு பத்திரத்தை தோழர் வி. ஆர். சீதாபதி வாசித்தளித்தார்.

தோழர் அண்ணாதுரை வரவேற்புக்குப் பதிலளிக்கையில், 'தமக்கு இதுபோன்ற வரவேற்புகள் பழக்கமில்லை,' என்றார்.

பின்பு தி. மு. கழகத்தின் சாதனைகளையும், திட்டங்களையும் குறித்துப் பேசினார். நாட்டின் ஜாதி வேறுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டியதை எடுத்துரைத்தார்.

இதுபோன்ற வரவேற்புகள் நடத்த முற்பட்ட வேலூர் நகரசபையைப் பாராட்டிவிட்டு, மேனுடுகள் போல் ஐனநாயகம் இங்கு செயல்பட இத்தகைய வரவேற்புகள் உதவும் என்றார். ஒருவரோடு ஒருவர் சண்டை...

சண்டை போட்டுக் கொண்டிருக்காமல் அபிவிருத்திக்கு வல்ல திட்டங்களை சமர்ப்பிப்பதில் போட்டியிடும்படி கேட்டுக் கொண்டார். இறுதியில் தோழர் எம். பி. சாரதி நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

ஆந்திரத்தில் கவர்னர் ஆட்சி?

காங்கிரஸ் கே. எம். பி. வேற்றுமை!

கர்நூல், ஜன. 1—

ஆந்திரத் தலைநகர் தகராறு காரணமாக ஆந்திர சர்க்காரில், காங்கிரஸ் கட்சிக்கும்—கிருஷிகர் லோக் கட்சிக்கும் இடையே கடுமையான அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது.

பிரகாசம் மந்திரி சபை ராஜிநாமா செய்து சட்ட சபையைக் கலைத்து, மறு தேர்தல் நடத்த வேண்டியிருக்கலாம் என்றுகூட தாங்கள் கருதுவதாகக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இடைக்காலத்தில், கவர்னர் ஆட்சி ஏற்பட்டால்கூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் தலைநகரை கர்நூலிலிருந்து மாற்றுவதாகவும், உயர் நீதி மன்றத்தை கர்நூலில் அமைப்பதாகவும், கர்நூலில் தலைநகர் கட்டிடங்களை நிர்மாணிப்பதில் கிடையாதென்றும் சர்க்கார் அறிவிக்க வேண்டுமென்று கே. எல். பி. கட்சி கோருகிறது. இதற்கு இணங்காவிடில்; மந்திரி சபையிலிருந்து விலகிவிட கே. எல். பி. பிரதிநிதி லட்சண்ணா தயாராக இருக்கிறாராம்; ஆனால் இதற்குத் தாங்கள் பணியப் போவதில்லையென்று காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர்.

கழகக் கூட்டம்

★

பண்ணுருட்டி

6—1—54 புதன் மாலை
6 மணிக்கு
தோழர் இரா. நெடுஞ்செழியன்
மற்றும் பலர் பேசுவர்

திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., ஆசிரியரால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.